# கிரிபாவ பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 24 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 28 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிரிபாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதி மற்றும் காசுப்பாய்ச்சல் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2012 ஜுலை மாதம் முதல் 2012 அக்டோபர் மாதம் வரை காலப் பகுதிக்காக 2013 மார்ச் மாதத்தில் பெற்றிருந்த ரூபா 673,850 இற்கான நீதி மன்றத் தண்டப்பணம் பெறுவனவுகள் மீளாய்வாண்டின் வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டுள்ளமையால் ஆண்டிற்கான வருமானம் அதே தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2012 ஜுலை மாதம் முதல் 2013 திசெம்பர் மாதம் வரையான காலப்பகுதிகள் கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. அத்துடன், 2011 ஆண்டிற்காக 2012 ஜனவரி முதல் ஜுன் வரையான காலப் பகுதிக்காக 2013 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 918,803 இற்கான முத்திரை கட்டண வருமானத்தை ஆண்டிற்கான வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமானம் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 2012 கொங்கிரீட் அச்சு கற்கள் பரப்பும் நிர்மாண வேலைக்காக ஒப்பந்தகாரரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும் என்ற அடிப்படையில் சபையினால் செலுத்தப்பட்டு

ஒப்பந்தக்காரர்களிடம் அறவிடப்பட்ட ரூபா 182,027 இற்கான தரப் பரிசோதனை கட்டணம், சம்பளம் மற்றும் படிகளுக்கான செலவுகளில் அடங்கியிருந்ததால் ஆண்டிற்கான சம்பளங்கள் படிகளுக்கான செலவுகள் அதே தொகையினால் மிகையாகவும் மற்றும் அதற்காக அறவிடப்பட்ட பணத்தை மூலதன வருமானத்தின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானமும் அதே தொகையால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.2 விளக்கம் அளிக்கப்படாத வித்தியாசங்கள்

---------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 18,462,982 தொகை எனினும் அதற்கு நேரொப்ப காணப்பட வேண்டிய மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தின் பங்களிப்பு கணக்கின் மீதி ரூபா 17,565,602 என காணப்பட்டிருந்தமையால் ரூபா 897,380 இற்கான விளக்கம் அளிக்கப்படாத வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------------------------------------

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 36,236,726 ஆகும். அவற்றில் ரூபா 2,275,503 தொகை 01 வருடத்தை விட பழைமையான மீதிகளாகும். அத்துடன் ரூபா 1,718,388 இற்கான மீதிக்காக காலப்பகுப்பாய்வு சமர்பித்திருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 37,807,211 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 4,216,277 தொகை 01 வருடத்தை விட பழமையான மீதிகளாகும்.

2 நிதி மீளாய்வு

----------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 130,582 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 38,083,976 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 38,214,558 வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மேற்கூறிய நிதி விளைவுகளுக்கு ரூபா 37,268,725 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 35,328,785 இற்கு மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பாக நிதி விளைவுகள் ரூபா 1,809,358 இற்கான மிகையொன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 19,918,810 இல் நூற்றிற்கு 84 ஆகிய ரூபா 16,726,445 உருவாக்கிய வருமானம்

அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் ஆகிய படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளன. அதே போல் மூலதன வருமானமாகிய ரூபா 37,268,725 இற்கான தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணத்தினை அடக்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பாக மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 20,049,393 தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 13,639,962 தனிப்பட்ட சம்பளம் செலவாக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 88 ஆகிய ரூபா 12,085,594 சம்பள மீளளிப்பு என பெறப்பட்டு வேறு வருமானங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவுகள் ரூபா 35,328,784 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 02 என ரூபா 649,213 மாத்திரம் சபை நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்ததுடன் மீதியின் நூற்றிற்கு 98 ஆன ரூபா 34,679,571 தொகை வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களுக்காக செலவிடப்பட்ட பணமாகும்.

## 2.3 வருமான நிருவாகம்

-------------------------------

### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், கடை வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான அதிகாரம் காணப்படவில்லை. எனினும் சபையின் வருமானத்தை சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் வீதவரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரம் போன்ற வருமானங்கள் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.3.2 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

------------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 208,000 ஆகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

-------------------------------------------------

ரூபா 151,000 பெறுமதியான 800 கலன்கள் கொள்ளளவு கொண்ட பவுஸர் ஒன்று சுமார் 06 வருட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. அத்துடன் புத்தக பெறுமதி ரூபா 1,750 இற்கான ரோனியோ இயந்திரமும் ரூபா 126,500 இற்கான புகைப்பட பிரதி பண்ணல் இயந்திரமும், சுமார் ரூபா 200,000 இற்கான வன்னி குடாவெவ மருத்துவ நிலையமும் பல வருட காலமாக பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

மீண்டுவரும் செலவு ரூபா 1,624,000 மற்றும் மூலதன செலவுகள் ரூபா 32,048,000 உம் மதிப்பீட்டு ஏற்பாடுகளை மிகைத்து செலவிடப்பட்டிருந்தது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்